


**06.06.2025**

**தலைப்பு செய்திகள்**

1. **ஜம்மு காஷ்மீரில் 46 ஆயிரம் கோடி ரூபாய்** மதிப்பிலான முடிவடைந்த திட்டப்பணிகளை பிரதமர் திரு. நரேந்திரமோடி துவக்கி வைத்ததோடு, புதிய திட்டங்களுக்கு இன்று அடிக்கல்நாட்டினார்.

2. **நாட்டின் இளைஞர்கள் உலகளவில் வலுவான** தடத்தை பதித்து சாதனைகளை படைத்திருப்பதாக பிரதமர் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

3. **மாநிலங்களவை தேர்தலுக்கு தமிழகத்திலிருந்து** போட்டியிடும் 6 வேட்பாளர்களும், வேட்பு மனுக்களை இன்று தாக்கல் செய்துள்ளனர்.

4. **டாஸ்மாக் நிறுவனத்தில் முறைகேடுகள் நடக்கும்** போது கேள்வி எழுப்ப மத்திய அரசுக்கு உரிமை உள்ளதாக பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

5. **இந்தோனேஷிய ஓப்பன் பேட்மிட்டன்** ஆடவர் இரட்டையர் காலிறுதியில் ரான்கிரெட்டி, சிராக் ஷெட்டி இணை இன்று களமிறங்குகிறது.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖❖

**பிரதமர் – ரயில்பாதை**

**ஜம்முகாஷ்மீரில் 46 ஆயிரம் கோடி ரூபாய்** மதிப்பிலான முடிவடைந்த வளர்ச்சித் திட்டப்பணிகளை துவக்கி வைத்ததோடு, புதிய திட்டங்களுக்கு பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று அடிக்கல்நாட்டினார்.

மின்மயமாக்கப்பட்ட 272 கிலோ மீட்டர் நீளமுள்ள உதம்பூர் - ஸ்ரீநகர் - பாராமுல்லா ரயில் இணைப்பு திட்டத்தையும் அவர் தொடங்கி வைத்தார்.

கத்ரா - ஸ்ரீநகர் இடையே 2 வந்தேபாரத் சிறப்பு ரயில் சேவைகளையும் பிரதமர் துவக்கிவைத்தார்.

ஜம்மு காஷ்மீரின் ரீசி மாவட்டத்தில் Chenab ஆற்றின் குறுக்கே கட்டமைக்கப்பட்ட உலகின் மிக உயரமான ரயில் பாலத்தை திறந்து வைத்து அதனை பிரதமர் ஆய்வுசெய்தார்.

இந்த பாலத்தை கட்டமைத்த பணியாளர்களுடன் பிரதமர் கலந்துரையாடினார்.

ரயில்வே அமைச்சர் திரு.அஸ்வினி வைஷ்ணவ் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்.

❖❖❖❖❖❖❖

**பிரதமர்**

**நாட்டின் இளைஞர்கள் உலகளவில் வலுவான** தடத்தை பதித்து சாதனை படைத்திருப்பதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்

மத்தியில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் 11 ஆண்டுககால நிறைவை ஒட்டி பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் படைப்பாற்றல் திறன், தீர்க்கமான முடிவு, வலிமையின் சின்னமாக இளைஞர்கள் திகழ்கிறார்கள் என்று கூறியுள்ளார்.

கடந்த 11 ஆண்டுகளாக ஒப்பற்ற சக்தியுடனும், வலுவுடனும், இளைஞர் சக்தி எழுச்சி பெற்றிருப்பதாக பிரதமர் புகழாரம் சூட்டியுள்ளார்.

ஸ்டார்ட் அப், அறிவியல், விளையாட்டு, சமூக சேவை, கலாச்சாரம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் கடந்த 11 ஆண்டுகளாக நினைத்து பார்க்கமுடியாத அளவிற்கு ஏராளமான சாதனைகளை இளையோர் புரிந்துள்ளதாக பிரதமர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இளைஞர்களின் ஆளுமையை இலக்காக கொண்டு கொள்கை மாற்றங்களும், திட்டங்களும் தீட்டப்பட்டுள்ளதாக பிரதமர் கூறினார்.

ஸ்டார்ட் அப், மின்னணு, திறன்மேம்பாடு, புதிய தேசிய கல்விக்கொள்கை போன்றவற்றின் மூலம் இளைஞர்கள் ஆளுமை பெற ஆற்றல் மிகு திட்டங்களை நம் தேசம் செயலாற்றி இருப்பதாக அவர் எடுத்துரைத்தார்.

வளர்ச்சியடைந்த பாரதத்தை கட்டமைக்க நாட்டு இளைஞர்கள் வலுவான செயல்திட்டங்களோடு நாட்டை முன்னேற்றப்பாதையில் கொண்டுசெல்வார்கள் என்று பிரதமர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖

**எல்.முருகன்**

**இளைஞர் நலன், அவர்களுக்கான வேலைவாய்ப்பு** மற்றும் திறமைகளை ஊக்குவிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு கடந்த 11 ஆண்டுகளாக மேற்கொண்டு வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

ரோஜ்கர் மேளா மூலம் 10 லட்சத்திற்கும் அதிகமான இளைஞர்களுக்கு அரசு துறைகளில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டதை அவர் தமது சமூக வலைதளப்பதிவில் சுட்டிக்காட்டினார்.

தேசிய கல்விக்கொள்கை, கேலோ இந்தியா திட்டம், மாதம் ஒரு யூனிகார்ன் நிறுவனம் உள்ளிட்ட மத்திய அரசின் பல்வேறு திட்டங்களையும் அவர் பட்டியலிட்டார்.

❖❖❖❖❖❖❖

**அனைத்து கட்சி குழு**

**தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின்** நிலைப்பாடை உலக நாடுகளிடையே எடுத்துரைக்கும் பி.ஜே.பி. உறுப்பினர் திரு. ரவிசங்கர் பிரசாத் தலைமையிலான அனைத்து கட்சி நாடாளுமன்ற பிரதிநிதிக்குழு இன்று ஜெர்மனி சென்றடைந்தது.

ஜெர்மனி நாட்டிற்கான இந்திய தூதர் திரு. அஜித் குப்தே 9 உறுப்பினர்கள் கொண்ட இப்பிரதிநிதிக் குழுவை தலைநகர் பெர்லினில் வரவேற்றார்.

தீவிரவாதத்திற்கு எதிரான பூஜ்ஜிய சகிப்புத்தன்மை தொடர்பான இந்தியாவின் தீர்மானத்தை அந்நாட்டு பிரதிநிதிகளுடன் இக்குழுவினர் எடுத்துரைத்ததாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖

**ரிசர்வ் வங்கி**

**ரிசர்வ் வங்கி பிற வங்கிகளுக்கு வழங்கும்** கடன்களுக்கான ரெப்போ வட்டி விகிதம் 6 சதவிகிதத்திலிருந்து 5.5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளது.

மும்பையில் இன்று இதற்கான அறிவிப்பை வெளியிட்ட வங்கி ஆளுநர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா இதன்மூலம் வங்கிகள் வழங்கும் கடன்களுக்கான வட்டி விகிதம் குறைவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் பணவீக்க விகிதம் வரும் ஆண்டு 3.7 சதவிகிதமாக இருக்கும் என்று கணித்துள்ள அவர், நடப்பாண்டு வளர்ச்சி விகிதம் 6.5 சதவிகிதமாக இருக்கும் என்றும் அறிவித்துள்ளார்.

**SDF** எனப்படும் வங்கிகளின் நிலையான வைப்புத்தொகை விகிதம் 5.25 சதவிகிதமாக இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖

**வேட்புமனு தாக்கல்**

**தமிழ்நாட்டில் வரும் 19-ம் தேதி நடைபெறவுள்ள** மாநிலங்களவை தேர்தலுக்கு தமிழகத்திலிருந்து போட்டியிடும் 6 வேட்பாளர்களும் இன்று வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர்.

திமுக வேட்பாளர்கள் பி.வில்சன், எஸ்.ஆர். சிவலிங்கம், கவிஞர் சல்மா மற்றும் திமுக ஆதரவுடன் போட்டியிடும் மக்கள் நீதிமய்ய கட்சி தலைவர் கமலஹாசன் ஆகியோர் திமு.க தலைவரும், முதலமைச்சருமான திரு.மு.க. ஸ்டாலின் முன்னிலையில் சட்டப்பேரவை கூடுதல் செயலாளர் திரு. சுப்பிரமணியனிடம் வேட்புமனுக்களை சமர்ப்பித்தனர்.

அதேபோல் அஇஅதிமுக வேட்பாளர்கள் இன்பதுரையும், தனபாலும், கட்சி பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே. பழனிச்சாமி முன்னிலையில் இன்று வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர்.

மதிமுக பொதுச்செயலர் திரு. வைகோ, பா.ம.க.வின் திரு. அன்புமணி ராமதாஸ் உட்பட 6 பேரின் பதவிக்காலம் அடுத்தமாதம் முடிவடைவதால் இந்த தேர்தல் நடைபெறுகிறது.

வேட்புமனு தாக்கல் வரும் திங்கட்கிழமை முடிவடைகிறது.

10-ம் தேதி அவை பரிசீலிக்கப்படுகின்றன.

அவற்றை விலக்கி கொள்ள 12-ம் தேதி கடைசிநாளாகும்.

தேவை ஏற்படின் வரும் 19-ம் தேதி தேர்தல் நடைபெறும்.

அதேபோல் அசாம் மாநிலத்தில் காலியாக உள்ள 2 மாநிலங்களவை பதவியிடங்களுக்கும் வரும் 19-ம் தேதி தேர்தல் நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖

**பக்ரீத் பண்டிகை வாழ்த்து**

**பக்ரீத் பண்டிகை நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி** தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் விடுத்துள்ள செய்தியில் தியாகத்தையும், பகிர்ந்துண்ணும் பண்பையும் பக்ரீத் திருநாள் பறைசாற்றுவதாக எடுத்துரைத்தார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் நபிகள் நாயகத்தின் போதனைகளை மனதில் நிறுத்தி அமைதி நிலவி, வளம்பெருக வாழ்த்தியுள்ளார்.

**இதனிடையே கன்னியாகுமரி மாவட்டம்** நாகர்கோவில் இளங்கடையில் பக்ரீத் பண்டிகை இன்று கொண்டாடப்பட்டது.

இதையொட்டி நடைபெற்ற கூட்டு தொழுகையில் ஏராளமான இஸ்லாமியர்கள் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖

**கே.என்.நேரு**

**மேட்டூர் அணை வரும் 12-ம் தேதி திறக்கப்படும்** நிலையில் 80 கோடி ரூபாய் மதிப்பில் தூர்வாரும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

திருச்சி மத்திய பேருந்து நிலையத்தில் பல்வேறு வழித்தடங்களில் மகளிருக்கான புதிய இலவச பேருந்து பயண சேவையை இன்று தொடங்கிவைத்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசியஅவர், கடைமடை பகுதிவரை தண்ணீர் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖

**சேகர்பாபு**

**தமிழ்நாட்டில் இந்த ஆண்டு இறுதிக்குள்** 3 **ஆயிரத்து** 500 திருக்கோவில்களில் குடமுழுக்கு நடத்தப்படும் என்று மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இன்றுமட்டும் 24 கோவில்களில் குடமுழுக்கு நடைபெற உள்ளதாகவும், நாளைமறுநாள் 74 திருக்கோவில்களில் குடமுழுக்கு நடைபெறும் என்றும் கூறினார்.

மாநிலம் முழுவதும் 4 ஆயிரம் கோவில்களில் திருப்பணிகளை நிறைவு செய்யும் பணிகள் நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖

**எ.வ.வேலு**

**திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர்** திருக்கோவில் தேரோடும் 4 மாட வீதிகளில் சிமெண்ட் சாலைகள் அமைக்கும் பணிகள் அடுத்தமாத இறுதிக்குள் முடிக்கப்படும் என்று மாநில பொதுப்பணித் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு தெரிவித்துள்ளார்.

இப்பணிகளை இன்று நேரில் ஆய்வுசெய்த அவர், விமான ஓடுதளத்திற்கு நிகராக இந்த சாலைகள் அமைக்கப்பட்டு வருவதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖

நயினார் நாகேந்திரன் வாய்ஸ்

**தமிழக பாரதிய ஜனதா கட்சியின் அமைப்பு** பொதுக்கூட்டம் மதுரையில் நாளைமறுநாள் நடைபெற உள்ளதாக கட்சியின் மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

மதுரையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், டாஸ்மாக் நிறுவனத்தில் முறைகேடுகள் நடக்கும் போது அதுகுறித்து கேள்வி எழுப்ப மத்திய அரசுக்கு உரிமை உள்ளதாக கூறினார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

நாமக்கல் வாய்ஸ்

**நாமக்கல் மாநகராட்சியில் மத்திய அரசின் நகர்ப்புற** மேம்பாட்டு அமைச்சகத்தின் நமஸ்தே திட்டத்தின்கீழ் முதன்முறையாக தூய்மை பணியாளர்களுக்கான கணக்கெடுப்பு முகாம் நடத்தப்பட்டுள்ளதாக மாநகராட்சி துப்புரவு அலுவலர் திரு.என்.திருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

நுழைவுச்சீட்டு

**தமிழ்நாட்டில் MBBS, BDS** இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான விண்ணப்ப பதிவு இன்று தொடங்கியது.

இளநிலை மருத்துவ பாடப்பிரிவு தேர்வுக்கான நீட் நுழைவுத்தேர்வு முடிவுகள் வரும் 14-ம் தேதி வெளியிடப்படும் நிலையில் விண்ணப்பங்களை பதிவுசெய்ய உரிய கால அவகாசம் வழங்கும வகையில் இந்நடவடிக்கை.

இதனிடையே பொறியியல் படிப்பிற்கான விண்ணப்ப பதிவு இன்றுடன் முடிவடைகிறது.

**இதனிடையே முதுநிலை மருத்துவ படிப்பிற்கான நீட்** நுழைவு தேர்வு வரும் ஆகஸ்ட் 3-ம் தேதி நடத்த உச்சநீதிமன்றம் தேசிய தேர்வு வாரியத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.

முன்னதாக இந்த தேர்வு வரும் 15-ம் தேதி நடைபெறுவதாக இருந்தது. இதற்கான உத்தரவை நீதிமன்றம் இன்று பிறப்பித்தது.

❖❖❖❖❖❖❖

**வைரவிழா**

**திருச்சி அகில இந்திய வானொலி நிலையத்தின்** பண்ணை இல்ல ஒலிபரப்பின் வைரவிழா தஞ்சாவூர் ஈச்சங்கோட்டை டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் வேளாண் கல்லூரி ஆராய்ச்சி நிலையத்தில் இன்று நடைபெற்றது.

வேளாண் துறையில் நவீன தொழில்நுட்பங்கள் குறித்து விவசாய ஆர்வர்கள் இதில் எடுத்துரைத்தனர்.

❖❖❖❖❖❖❖

**இருவரி**

**தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு அருகே** தோமலஹள்ளி கிராமத்தில் வேளாண் உத்தரவாத பிரச்சார இயக்கத்தின் கீழ் கரீப் முன்பருவ விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

**புதுக்கோட்டை மாவட்டத்தில் குழந்தைகள்** நலத்துறை சார்பில் நேசக்கரம் சிறப்பு தத்தெடுத்தல் மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மு.அருணா இன்று திறந்துவைத்தார்.

**திருப்பத்தூர் மாவட்டத்தில் போதை பொருள் தடுப்பு** குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. சிவசவுந்தரவள்ளி தலைமையில் இன்று நடைபெற்றது.

❖❖❖❖❖❖❖

**பேட்மிட்டன்**

**இந்தோனேஷிய ஓப்பன் பேட்மிட்டன்** ஆடவர் இரட்டையர் காலிறுதியில் ரான்கிரெட்டி, சிராக் ஷெட்டி இணை - மலேஷிய இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖

**டென்னிஸ்**

**தாஷ்கண்டில் நடைபெறும் சர்வதேச மகளிர்** டென்னிஸ் போட்டியின் அரையிறுதிக்கு இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் முன்னேறியுள்ளார்.

காலிறுதி ஆட்டத்தில் அவர் அமெரிக்காவின் மியா ஹார்விட்டை 6-3, 6-4 என்ற செட்கணக்கில் இன்று தோற்கடித்தார்.

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖❖

பிரதமர் – ரயில்பாதை

**ஜம்முகாஷ்மீரில் 46 ஆயிரம் கோடி ரூபாய்** மதிப்பிலான முடிவடைந்த வளர்ச்சித் திட்டப்பணிகளை துவக்கி வைத்ததோடு, புதிய திட்டங்களுக்கு பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று அடிக்கல்நாட்டினார்.

மின்மயமாக்கப்பட்ட 272 கிலோ மீட்டர் நீளமுள்ள உதம்பூர் - ஸ்ரீநகர் - பாராமுல்லா ரயில் இணைப்பு திட்டத்தையும் அவர் தொடங்கி வைத்தார்.

கத்ரா - ஸ்ரீநகர் இடையே 2 வந்தேபாரத் சிறப்பு ரயில் சேவைகளையும் பிரதமர் துவக்கிவைத்தார்.

ஜம்மு காஷ்மீரின் ரீசி மாவட்டத்தில் Chenab ஆற்றின் குறுக்கே கட்டமைக்கப்பட்ட உலகின் மிக உயரமான ரயில் பாலத்தை திறந்து வைத்து அதனை பிரதமர் ஆய்வுசெய்தார்.

இந்த பாலத்தை கட்டமைத்த பணியாளர்களுடன் பிரதமர் கலந்துரையாடினார்.

ரயில்வே அமைச்சர் திரு.அஸ்வினி வைஷ்ணவ் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்.